Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# மணிமேகலைக் காப்பியத்தில் சிற்பமும் ஓவியமும்

**க.ஶ்ரீகாந்த்,**
**உதவிப் பேராசிரியர்,பாரதியார் பல்கலைக் கூடம்,**
**புதுச்சேரி**

41

**ஆய்வுச் சுருக்கம்**

மணிமேகலைக் காப்பியம் பல்வேறு கலைகள் பற்றிய செய்திகளைப் பதிவு செய்துள்ளது. அவற்றுள் ஓவியக்கலை சிற்பக் கலை பற்றிய செய்திகளை இவ்வாய்வு, கவனம் செலுத்துகிறது. ஓவியக்கலை பற்றியும், சிற்பக் கலை பற்றியும் நுட்பமான கண்ணோட்டத்தைத் பழந்தமிழர்கள் கொண்டிருந்ததை இவ்வாய்வுக் கட்டுரை தக்க சான்றுகளுடன் விளக்குகிறது. கடவுச் சொற்கள் மணிமேகலையில் சிற்பம், மணிமேகலையில் ஓவியம், பளிங்கு மண்டபம்

**முன்னுரை**

தமிழ்க் காப்பியங்களில் மணிமேகலை தனித்துவம் வாய்ந்தது. இக்காப்பியம், பல்வகை கலைகள் பற்றிய செய்திகளைத் தன்னுள் தாங்கி நிற்கிறது. இந்நூல் தன் பெயரிலேயே கலைக்கும் தனக்குமான பிரிக்க முடியாத உறவினைப் பறைசாற்றியிருக்கிறது. இந்நூலில் இடம் பெற்றுள்ள, கலைகள் பற்றிய குறிப்புகள் பழந்தமிழரின் அழகுணர்வையும், அவர்களது தொழில்நுட்பத்தையும், பண்பாட்டையும் விளக்கும் வகையில் உள்ளன. இக்கட்டுரை, கண்ணிற்கு விருந்தையும், கருத்திற்குப் புதுமையையும் தரும் சிற்பம், ஓவியம் ஆகிய இரு கலைகள் பற்றி மணிமேகலைக் காப்பியம் கூறும் கருத்துகளை ஆராயும் விதமாக அமைந்துள்ளது.

**மணிமேகலைக் காப்பியத்தில் கலைகள்**

கலைகள் அறுபத்து நான்கு உள்ளன என்னும் கருத்து வாத்சாயனர் எழுதிய நூலில் தான் முதன்முதலாக இடம்பெற்றுள்ளது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.(தேவநேய. பாவாணர்:1985:547) எனினும், தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்திலேயே இக்கலைகளின் எண்ணிக்கை பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**பண்ணுங் கிளியும் பழித்த தீஞ்சொல்**
**எண்ணெண் கலை (சிலம்பு: 14: 166)**

என்றும்,

**எண்ணான் கிரட்டி யிருங்கலை (சிலம்பு: 22: 138)**

என்றும், சிலம்பில் இடம் பெறும் பாடலடிகள் கலைகள் அறுத்துநான்கு என்னும் கருத்தோட்டம் பழங்கால முதல் தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளதை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தோடு இணைத்து வைத்துப் பேசத் தகுந்த மணிமேகலை, இக்கருத்தை மேலும் விரிவாக எடுத்து இயம்புகின்றது.

**வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்துக்**
**கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்**
**பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்**
**தண்ணுமைக் கருவியும் தாழ்தீங் குழலும்**
**கந்துகக் கருத்து மடைநூல் செய்தியும்**
**……………………………………………………**
**கோலம் கோடலும், கோவையின் கோப்பும்,**
**காலக் கணிதமும் கலையின் துணிவும்,**
**நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்**
**கற்றுத் துறைபோகிய பொன் தொடி நங்கை” (மணிமேகலை: 2: 18-32)**

என்று கலைகள் பற்றிய பட்டியலை முதலில் வெளிப்படுத்திய முதல் தமிழ் நூலாக மணிமேகலை விளங்குவதை அறியலாம்.

**கலைஞர்களுக்கு அங்கீகாரம்**

மணிமேகலை இயற்றப்பட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் கலைகள் மிகுந்திருந்ததை மணிமேகலையில் உள்ள ஒவ்வொரு காதையும் உணர்த்துகின்றன. கலைஞர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் வாய்ந்தவர்களாக விளங்கியிருக்கின்றனர். அதனால், ஒவ்வொரு கலையில் தேர்ச்சிபெற்றவர்களுக்கும் தனித்தனி தெருக்கள் இருந்ததை,

**செம்பு செய்ஞ்ஞரும், கஞ்ச காரரும்,**
**பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்**
**மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்**
**வரம்தர எழுதிய ஓவிய மாக்களும்**
**தோலின் துன்னரும் துன்ன வினைஞரும்**
**மாலைக் காரரும் காலக் கணிதரும்**
**நலம் தரும் பண்ணும் திறனும் வாய்ப்ப**
**நிலம்கலம் கண்டம் நிகழக் காட்டும்**
**பாணர் என்றிவர் பல்வகை மறுகும் (மணி: 28: 35 -43)**

என்று கச்சி மாநகர் புக்க காதையில் வரும் பாடலடிகள் காட்டுகின்றன. இச்செய்தி கலைகளும், கலைஞர்களும் பழந்தமிழ்நாட்டில் இருந்தனர் என்பதை வெளிப்படுத்துவதுடன், மன்னரிடத்திலும், மக்களிடத்திலும், கலைஞர்களுக்கான செல்வாக்கு மிகுந்திருந்ததையும் காட்டுகின்றது.

**மணிமேகலையில் சிற்பக் கலை**

சிற்பக்கலை பற்றிய வியத்தகு செய்திகள் மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியத்தின் முதல் காதையான விழாவறை காதையில், இந்திரவிழா பற்றிய செய்தி இடம்பெறுகிறது. இவ்விழாவிற்காக வீதிகள் தோறும் பொற்பாலிகைகளாலும், பூரண

கும்பங்களாலும், பாவை விளக்குகளாலும் அலங்கரிக்கப்படுகிறது.(மணிமேகலை 1 45) பாவை விளக்கு என்பது பெண்ணின் கைகளில் விளக்கு ஏந்தி இருப்பது போன்றதோர் சிலை வடிவமாகும். பெரும்பாலும் இச்சிலை ஐம்பொன்னால் உருவாக்கப்பட்டிருக்கும், கோவில் தூண்களில் இவ்விளக்கு கருங்கல்லால் செதுக்கப்பட்டிருக்கும். இவ்விளக்கு இன்றும் தமிழ் நாட்டுக் கோயில்களில் அலங்கரித்திருப்பதைக் காணலாம். அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அவ்விளக்கு, பழந்தமிழர் நகரை அணிசெய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இக்காப்பியம் உணர்த்துகின்றது.

**மணிமேகலைக் காப்பியத்தில் கோயில்கள்**

இக்காப்பியத்தில் பலவகையான கோயில்கள் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இதன் முதல் காதையிலேயே, புகார் நகரில் வச்சிரம் தாங்கி நிற்கும் ஆயிரம் கண்களை உடைய இந்திரனுக்கு வச்சிரக்கோட்டம் (கோயில்) இருந்த செய்தி இடம் பெறுகிறது. (மணி: 1: 26-27) மேலும், நெற்றிக் கண்ணினை உடைய சிவபெருமான் முதல் சதுக்கப் பூதம் இறுதியாக உள்ள தெய்வங்களுக்குத் தனித்தனி கோயில்கள் இருந்தன என்பதை இக்காப்பியத்தின் வழி அறியமுடிகிறது.(உ.வே,சா: 1898: xxxiv) தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் சிற்பக் கலைக்கூடமாக விளங்குகின்றன. அங்கே, தூணிலும் துரும்பிலும் கலைகள் வாழ்கின்றன. மணிமேகலைக் காப்பியம், பழந்தமிழ்நாட்டில் கோயில்கள் இருந்த செய்தியைத் தருகின்றது. அக்கோயில்கள் கால வெள்ளத்தில் கரைந்து போயிருந்தாலும் அக்கோயில்கள் இருந்த செய்தியை இலக்கியங்கள் ஆவணப்படுத்தியிருக்கின்றன.

**பளிங்கு மண்டபம்**

மணிமேகலையில் பளிங்கு மண்டபம் பற்றிய அரிய செய்திகள் குறிப்பிட்டப்பட்டுள்ளன. அம்மண்டபம், பல அதிசயங்களைத் தாங்கி நிற்கிறது. முதலாவது, அம்மண்டபத்தின் உள்ளிருந்து ஓசைகள் வெளியே செல்லாது. இரண்டாவது, அங்கே தாமரை மலர் போன்ற புத்த பீடிகை உள்ளது. அந்தப் பீடத்தில் மக்கள் தாம் விரும்பிய தெய்வத்தை நினைத்து மலர்களைத் தூவினால் அம்மலர்கள் அப்பீடிகையை விட்டு நீங்கி, நினைத்த தெய்வத்திடம் போய்ச் சேரும். எதையும் நினைக்காமல் மலர்களைத் தூவினால் அவை எங்கும் செல்லாது அந்தப் பீடத்திலேயே இருக்கும் என்று கூறப்படுகிறது. (மணி:3:62-66) மூன்றாவது, அந்த மண்பத்திற்குள் புகுந்து தாழிட்டுக் கொண்டால், வெளியே இருப்பவர்களால் அதன் வாசல் எங்கே இருக்கிறது என்று கண்டறியமுடியாத அளவிற்கு நுட்பமான கதவினைக் கொண்டது. மணிமேகலையைத் தேடி, அம்மண்டபத்தருகே வந்த உதயகுமாரன், அம்மண்டபத்தின் வாயிலை அறிவதற்காக அதன் பக்கச் சுவர்களைத் தன் கைகாளால் தடவிப்பார்த்தப் பின்னும் அறிந்துகொள்ள முடியவில்லை. (மணி: 5 :10-11) அக்காலத்தில் கட்டிடக் கலையில் அதிசயிக்கத்தக்கச் சிந்தனைகள் இருந்ததை இக்காப்பியத்தின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

பளிங்கு மாளிகையில் இருக்கும் அந்தப் பீடம் மயன் என்னும் தெய்வத்தச்சனால் செய்யப்பட்டது என்றும் இந்நூல் கூறுகின்றது. இந்த புத்த பீடிகை மட்டுமன்றி, புகார் நகரில் இருந்த சக்கரவாளக் கோட்டத்தினையும், கந்திற் பாவையையும், செய்தவன் இவனே என்று அறிய முடியகிறது. இவனை அசுரத் தச்சன் என்றும் அழைப்பர் என்று மகாமகோ உபாத்தியாய உ.வே

சாமிநாதையர் குறிப்பிடுகிறார்.(மு.நூ :520)

**சக்கரவாளக் கோட்டம்**

காவிரிப்பூம்பட்டினத்திருக்கு வெளியே சக்கரவாளக் கோட்டம் அமைந்திருந்ததை மணிமேகலை காப்பியத்தின் வழி அறிய முடிகிறது. அதற்குச் சுடுகாட்டுக் கோட்டம் என்னும் வேறு பெயரும் உண்டு. உலகம் முப்பத்தொன்றையும் உள்ளடக்கிய கோளத்தைச் சக்கரவாளம் என்பர். (உ.வே.சா.: 1898: 454) இதனுள்ளே, சம்பாபதி கோயில், கந்திற் பாவை, உலக வறவி என்னும் இம்மூன்றும் இருக்கின்றன. இங்கே முனிவர்கள் பலர் இருந்து தவம் செய்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இதனுள் பலவிதமான அதிசய சிலைகள் இருந்ததை இக்காப்பியத்தின் வழி அறியமுடிகிறது.

இக்கோட்டம் நான்கு புறத்திலும் மதில்களால் சூழப்பட்டிருந்தது. நான்கு புறத்திலும் இக்கோட்டத்திற்குள் நுழைவதற்கு வாயில்கள் இருந்தன. ஒவ்வொரு வாயிலும் அழகிய சிற்பங்களாலும், ஓவியங்களாலும் அணிசெய்யப்பட்டிருந்தது.

வாயிலின் ஒரு புறத்தில் ஓவியம் போல வானுயர நின்ற விமானம் ஒன்றுள்ளது. மற்றோர் வாயிலின் வழியே விண்ணவர்கள் நுழைந்து செல்லும் செழுமையான கொடிகள் நிறைந்திருக்கின்றன. வேறொரு வாயில் வெண்மையான சுதையால் செய்யப்பட்டு, மாடத்தில் உருவங்கள் வரையப்படாது காணப்பட்டது.இன்னொரு வாயில் மடிக்கப்பட்ட சிவந்த வாயையும்,கோபம் கொண்ட பார்வையையும், கையில் சூலத்தை ஏந்திய நீண்ட தோற்றமுடைய பூதம் இருந்தது.

இதனுள், காளிக்கோட்டம், அருந்தவர், அரசர், கணவன் இறக்க உடனே இறந்த பெண்கள் ஆகியோர் அடக்கம் செய்யப்பட்டதன் அடையாளமாக, அவரவர் தகுதிக்கேற்ப, சிறியனவும், பெரியனவுமாகக் கட்டப்பட்டுள்ள கோட்டங்களும் இருந்துள்ளன.

**நால்வகை மரபி னரூபப் பிரமரும்**
**நானால் வகையின் அரூபப் பிரமரும்**
**இருவகைச் சுடரும், இருமூ வகையில்**
**பெருவனப்பு எய்திய தெய்வத கணங்களும்**
**பல்வகை அசுரரும், படுதுய ருறூஉம்**
**எண்வகை நரகரும் இருவிசும் பியங்கும்**
**பன்மீன் ஈட்டமும் நாளும் கோளும்**
**தன்னகத் தடக்கிய சக்கர வாளத்து (மணி :6 :176 -185)**

என்னும் அடிகள், அக்கோட்டத்தினுள், பல்வேறு உலகத்தில் வாழ்கின்றவர்கள் உறைகின்றனர் என்னும் செய்தியைத் தருகிறது. அக்கோட்டத்தில் இவர்கள் சிலைவடியாக வடிக்கப்பட்டிருந்ததை இதன் வழி அறியலாம்.

**பேசும் சிலைகள்**

சக்கரவாளக் கோட்டத்தில் உள்ள தூண்களில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அந்தச் சிற்பங்களில் கந்திற்பாவையும் ஒன்று. கந்திற் பாவை என்பது தூணில் செதுக்கப்பட்டச் சிற்பம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

என்று பொருள். இதனைச் செய்தவன் மயன் என்னும் தேவதச்சன். காயசண்டிகை என்பவளைத் தேடி வந்த அவளது கணவன் காஞ்சனன் என்பவனுடன் இப்பாவை பேசிய செய்தியை மணிமேகலைக் காப்பியம் காட்டுகிறது.(மணி:20:110-115). இக் கந்திற்பாவை, மணிமேகலையோடும் உரையாடியதை, கந்திற்பாவை வருவது உரைத்த காதை வழி அறியலாம்.

மேலும், சக்கரவாளக் கோட்டத்தில் உள்ள சம்பாபதி கோயிலின் கிழக்கேயுள்ள தூண் ஒன்றில், தெய்வ கணங்களில் ஒருவனாகிய துவதிகனென்பவனுடைய உருவம் செதுக்கப்பட்டிருந்தது. இதனைச் செதுக்கியவனும் தெய்வத் தச்சன் மயன் என்பவன்தான். இச்சிலை முற்காலத்து உண்மைகளையும் கூறும் ஆற்றல் உடையது. கேட்பவர்க்குக் கேட்பதைச் சொல்லும் திறன் உடைய இச்சிற்பத்தை நாவுடைய பாவை என்றும் அழைப்பர் (உ.வே. சா. :1898 :92)

**கந்துடை நெடுநிலைக் கடவுள் எழுதிய**
**வந்திற் பாவை அருளும் ஆடியின் (மணி: 15: 33-34)**
**கந்துடை நெடுநிலைக் காரணம் காட்டிய**
**தந்துணைப் பாவை (மணி :17: 89-90)**
**நெடுநிலைக் கந்தினிடவயின் விளங்கக்,**
**கடவுள் எழுதிய பாவையாங்கு உரைத்தலும் (மணி: 20: 110-111)**
**கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்தின்,**
**குடவயின் அமைந்த நெடுநிலை வாயின்**
**முதியாள் கோட்டம் (மணி: 21: 1-3)**
**நாவுடைப் பாவை நங்கையை எடுத்தலும் (மணி 22 91)**

எனப் பல இடங்களில் இக்காப்பியம், பேசும் பாவைகள் பற்றிச் சித்திரித்துள்ளது.

**கலைநயம் மிக்க மண்டபம்**

மணிமேகலையில் வரும் சோழ மன்னன் மாவண் கிள்ளியின் மண்டபத்தைப் பற்றி சீத்தலைச் சாத்தனார் தரும் குறிப்புகள் கவனிக்கத்தக்கன. அம்மண்டபத்தை உருவாக்கியவர்கள் பற்றி,

**மகத வினைஞரும் மாராட்டக் கம்மரும்**
**அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்**
**தண் தமிழ் வினைஞர் தம்மோடு கூடிக்**
**கொண்டு இனிது இயற்றிய கண்கவர் செய்வினைப்**
**பவளத் திரள்கால் பன்மணிப் போதிகைத்**
**தவள நித்திலத் தாமம் தாழ்ந்த**
**கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்**
**தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின்**
**பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து**
**இந்திர திருவன் சென்றினிது ஏறலும் (மணி:19: 108-117)**

என்று சாத்தனார் வருணித்துள்ளார். கலை ஆர்வம் மிகுந்த மன்னனாக மாவண்கிள்ளி விளங்கியதை

இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. பாரத கண்டத்தின் பல பகுதியிலிருந்தும், உலகின் கலைவளம் மிக்க நாடுகள் பலவற்றிலிருந்தும் கைதேர்ந்த கலைஞர்களை அழைத்துத் தன் அவைக்களத்தை உருவாக்கியச் செய்தி அக்காலத்தில் தமிழர்களின் அழகியல் உணர்வைக் காட்டுகின்றது.

**மணிமேகலையில் ஓவியக் கலை**

சிற்பக் கலையைப் போலவே ஓவியக் கலை பற்றியும் பல்வேறு செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக ஓவியக் கலையைக் கற்பதற்கென்று ஒரு நூல் இருந்ததை,

**நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும் (மணி :2: 30-31)**

என்னும் பாடலடிகள் காட்டுகின்றன.

சீத்தலைச் சாத்தனார் புகார் நகரை வருணிக்கும் பொழுது, அங்கே, செங்கற்களால் கட்டிய பல கட்டிடங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்**
**மையறு படிவத்து வானவர் முதலா**
**எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி**
**வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய**
**கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும் (மணி: 3: 126-131)**

என்னும் பாடலடிகள் புகார் நகரில் இருந்த வீடுகள் தோறும் கண்கவர் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த செய்தியைத் தருகின்றன. வானத்தில் உள்ள தேவர்களும், இந்நிலத்தில் வாழும் பலவகை உயிரினங்களையும் ஓவியர்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வரைந்திருந்த செய்தியை இவ்விலக்கியம் காட்டுகின்றது. அவ்வோவியங்களை புகார் நகருக்குப் புதிதாக வரும் மக்கள் கண்டுகளித்ததையும் இக்காப்பியம் பதிவு செய்துள்ளது. சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த வாயில் ஒன்றில் நெல்லும், கரும்பும், பொய்கையும், சோலையும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்ததை,

**நெல்லும் கரும்பு நீரும் சோலையும்**
**நல்வழி எழுதிய நலங்கிளர் வாயிலும் (மணி :6: 41-42)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பேசும் ஓவியங்கள்**

உதயகுமாரன் சக்கரவாளக் கோட்டத்திற்குள் மணிமேகலையை நாடிச் சென்ற போது அங்கிருந்த பலவகையான ஓவியங்களைக் காண்கிறான். அவ் வோவியங்களுள் ஒன்று அவனுடன் பேசியதை எண்ணி வியக்கிறான்.

**வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்**
**சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்,**
**………………………………………………….**
**முந்தை முதல்வி அடிபிழைத் தாயெனச்**
**சித்திர முரைத்த இதூஉந் திப்பியம்**

**இந்நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்**

**பின்னறி வாமெனப் பெயர்வோன் (மணி: 19: 5-19)**

இந்த ஓவியங்களின் அதிசயத்தைப் பற்றிப் பின்னர் அறிந்துகொள்வோம் என்று உதயகுமாரன் அகன்று செல்வாதாக சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையில் கூறப்படுகிறது.

**ஓவியப் பாவை**

மணிமேகலையை விரும்பி, அவளைப் பின்தொடரும் உதயகுமாரன் முதலில் அவளை ஓர் ஓவியம் என்று நினைக்கிறான். பின்னர், நீலமலர் போன்ற கண்களை உடைய பெண் தான் அவள் என்று அவன் தெளிவடைகிறான்.

**ஓவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்**

**காவியங் கண்ணி யாகுதல் தெளிந்து (மணி: 5: 7-8)**

மேலும், மணிமேகலையின் தோழி சுதமதியிடம், எந்தப் பக்கம் பார்த்தாலும் அழகு மிகுந்த ஓவியத்தைப் போல இருக்கின்ற இளங்கொடி எங்கே இருக்கிறாள் என்று அவன் கேட்கிறான். (மணி: 5: 11-12) மேலும் பெண்களை வருணிக்கும் போது, மிகச்சிறந்த ஓவியன் வரைந்த கண்கவர் ஓவியம்போலக் கண்களைக் கவரும் அழகுடையவள் (மணி:22:85) என்று சாத்தனார் வருணிக்கிறார். மணிமேகலைக் கிளைக் கதையில் வரும் விசாகை என்பவளைப் பற்றிக் கூறும் போது,வண்ணங்களைக் கொண்டு எழுதாது வடிவங்களை மட்டுமே கொண்டு எழுதப்பட்ட ஓவியம் போல் விளங்கினாள் என்று சாத்தனார் குறிப்பிடுகிறார்

**முடிவுரை**

மேலே கூறியனவற்றைக் கொண்டு, மணிமேகலைக் காப்பியம் பல்வகைக் கலைகளைக் காட்சிப்படுத்தும் காப்பியமாகத் திகழ்வதை அறியலாம். சிற்பக் கலை பற்றியும், ஓவியக் கலை பற்றியும் மிகநுட்பமான, வியக்கத்தக்கச் செய்திகளைச் சாத்தனார் பதிவுசெய்துள்ளதை இக்காப்பியம் காட்டுகின்றது. அச்சிற்பங்களையும் ஓவியங்களையும் இன்று கண்களால் காண முடியாவிட்டாலும், இக்காப்பியம், எழுத்தோவியத்தால் கற்பவர் மனக்கண்ணில் அக்காட்சிகளைக் காட்டுகின்றது. மணிமேகலையில் கூறப்பட்டுள்ள சுடுகாட்டைப் பற்றிய வருணனையில் கூட, இத்தகைய கலைஅழகுமிக்க சிற்பங்களும், ஓவியங்களும் இருக்கிறதென்றால் பழந்தமிழர் கலைகளுக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவத்தை இக்காப்பியத்தின் மூலம் அறிய முடியகிறது,

1. தேவநேயப்பாவணர். ஞா.,: 1985, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, முதல் மடலம் – முதற் பகுதி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை.
2. சாமிநாதையர், உ.வே.,(பதி): 1898, மணிமேகலை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை
3. சாமிநாதையர், உ.வே.,(பதி): 1892, சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை
4. வேங்கடசாமி நாட்டார்., நா.மு., துரைசாமிப்பிள்ளை,,ஔவை.சு,(உரை): 2001 (நாலாம் பதிப்பு) மணிமேகலை, சாரதா பதிப்பகம், சென்னை